சி.சி.22 /2015 13.05.2019

அ.சா. 3 சாட்சி. திருமதி. மஞ்சுளா

முதல் விசாரணை.

நான் சென்னையில் குடியிருந்து வீட்டைபராமாித்து வருகிறேன். அ.சா.1 எனது மாமியார்.அ.சா.1 க்கும், அ.சா.1 னின் கணவருக்கும் உடல் நிலை சாியில்லாத காரணத்தினால் சென்னையில் இருந்து இங்கு வந்து பார்த்து விட்டு செல்வேன். 2014-ம் வருடம் எனது மச்சினன் விஜயகுமார் போன் செய்து அ.சா.1 னின் வீட்டில் இருந்த நகை மற்றும் பணம் திருடு போய் விட்டதாக தகவல் கூறினார். சம்பவத்தை கேள்விபட்டு அ.சா.1 னின் வீட்டிற்கு வந்து புகார் கொடுப்பதற்காக அவரை அழைத்து கொண்டு காவல் நிலையம் சென்றேன். போலீசார் என்னை விசாாித்தார்கள்.

எதிாி தரப்பில் குறுக்கு விசாரணை.

என்ன சம்பவம் நடந்தது என்ற விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தொியாது என்றால் சாிதான். புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தொியாது என்றால் சாியல்ல. நானும், அ.சா.1 னும், 2 ம் சொன்னோம் போலீசார் எழுதி கொண்டார்கள். புகாாில் அனைவரும் கையொப்பம் செய்தோமா என்றால் ஆமாம்.எனக்கும், எதிாிக்கும் லேப் வைப்பதில் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக என் மாமியாரை பொய் புகார் கொடுக்க வைத்து அதை அனுசாித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஒம்/-திருமதி.T.மாலதி

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர் .

சி.சி.22 /2015 13.05.2019
அ.சா. 2 சாட்சி. திருமதி. மணி

முதல் விசாரணை.

நான் ஓமலூர் வட்டம், கருப்பணம்பட்டி திட்டியில் குடியிருந்து தயிர்,மோர் விற்று ஜீவனம் செய்கிறேன். நான் அ.சா.1 யை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல உதவி செய்த வகையில் எனக்கு அவர் பழக்கம்.அ.சா.1 னின் வீட்டுகாரருக்கு காலில் அடிப்பட்டு மருத்துவமனையில் வைத்தியம் பார்த்து பின்னர் நல்லாம்பட்டி சென்று கால் கட்டு போட்டு வைத்தியம் பார்த்து வந்தோம். அ.சா.1 னின் கணவருக்கு உடல் நிலை சாியில்லை என்று அவரது மருமகள் மஞ்சுளாவிடம் தகவல் சொன்ன போது அவர் மருத்துவர் ஒருவரை ஊசி போடுவதற்காக ஒருவரை அனுப்புவதாக கூறினார். ஆஜர் எதிாியை தொியும். ஆஜர் எதிாி தான் மேற்கண்ட சம்பவத்தின் போில் 5 வருடத்திற்கு முன்பு அ.சா.1 னின் வீட்டிற்கு வந்த அ.சா.1 னின் கணவருக்கு ஊசி போட்டார். அப்போது நான் உடனிருந்தேன். பின்னிட்டு நான் அங்கிருந்து எனது வீட்டிற்கு வந்து விட்டேன். பிறகு மாலைநேரத்தில் நான் அ.சா.1 னின் வீட்டிற்கு சென்ற போது அ.சா.1 னும், அவரது கணவரும் மயக்கமாக இருந்தார்கள். பின்பு அவர்களை எழுப்பி விட்டு டீ.குடிக்க குடித்து விட்டு திரும்பவும் நான் வீட்டிற்கு வந்து விட்டேன். மறுநாள் காலை அ.சா.1 எனது வீட்டிற்கு வந்து வீட்டில் இருந்த நகைகளையும், பணத்தையும் காணவில்லை என்று கூறினார். பின்பு அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும் போது நானும் உடனிருந்தேன்.

போலீசார் என்னை விசாாித்தார்கள்.

எதிாி தரப்பில் குறுக்கு விசாரணை.

எதிாி அ.சா.1 மருமகள் மஞ்சுளா சொல்லி தான் அ.சா.1 னின் வீட்டிற்கு வந்தார் என்றால் சாிதான். மஞ்சுளா மூலமாக தான் எதிாி அறிமுகம் என்றால் சாிதான்.நான் அ.சா.1 னின் வீட்டிற்கு சென்ற போது அ.சா.1 மயக்க நிலையில் இருந்தார் என்ற விவரத்தை போலீசார் விசாாித்த போது சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அ.சா.1 க்கு டீ.வைத்து கொடுத்த விவரத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அ.சா.1 னும், நானும் சேர்ந்து கையொப்பம் செய்து தான் புகார் கொடுத்தோமா என்றால் எனக்கு சாியாக நினைவில்லை. புகாரை நான் தான் எழுதினேனா என்றால் இல்லை நான் தான் சொன்னேன். நகை , பணம் திருடு போனதா என்று எனக்கு நேரடியாக தொியுமா என்றால் இல்லை. அ.சா.1 சொல்லி தான் தொியும். அ.சா.1 வீட்டில் இருந்து நகை , பணத்தை யார் எடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாக தொியாது என்றால் சாிதான். பேனாவில் எழுதியதில் தான் போலீசார் கையொப்பம் வாங்கி கொண்டார்களா என்றால் எழுதிய பேப்பாில் வாங்கிக் கொண்டார்கள் எதில் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த அன்றே என்னை போலீசார் விசாாித்து விட்டு பிறகு என்னை விசாாிக்கவில்லை என்றால் சாிதான். எதிாிக்கும், அ.சா.1 னின் மருமளுக்கும், லேப் வைப்பதில் இருந்த பிரச்சினை சம்மந்தமாக அ.சா.1 பொய் புகார் கொடுத்ததை அனுசாித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஒம்/-திருமதி.T.மாலதி
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர் .

சி.சி.22 /2015 13.05.2019

அ.சா. 1 சாட்சி. திருமதி. அய்யம்மாள்

முதல் விசாரணை.

நான் ஓமலூர் வட்டம், கருப்பணம்பட்டியில் குடியிருக்கிறேன். எனது கணவர் பெயர் வீரமுத்து. சுமார் 4 அல்லது 5 வருடத்திற்கு முன்பு சரவணன் என்பவர் எனது வீட்டிற்கு வந்து கை, கால் முட்டுவலி சம்மந்தமாக ஊசி போடுவதாக கூறினார். எனது கணவருக்கு சரவணன் மயக்கமருந்து கொடுத்து படுக்க வைத்து விட்டார். என்னை உள்ளே அழைத்து சென்று மயக்க ஊசி போட்டு படுக்கவைத்தார். அதனால் எனக்கு நினைவில்லை. எனது வீட்டில் இருந்த பீரோவை திறந்து பீரோவில் இருந்த 3 பவுன் எடையுள்ள நெக்லஸ் ஒன்று, 3 பவுன் எடையுள்ள வளையல் 2, 1 பவுன் எடையுள்ள மோதிரம் , 1 பவுன் எடையுள்ள கை செயின், சுமார் 2 பவுன் எடையுள்ள தோடுகள் 3 மற்றும் பணம் 32,000/-த்தை எடுத்து கொண்டார். பின்பு நடந்த சம்பவத்தின் போில் நடவடிக்கை எடுக்க வேண்டி ஓமலூர் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கூறினேன். நான் கூறியதை போலீசார் எழுதி கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாாில் உள்ள கைரேகை என்னுடையது தான். நான் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.1. பின்பு காவல் நிலையத்தில் போலீசார் தகவல் சொல்லி நான் போய் சென்று என்னுடைய நகையை அடையாளம் காட்டினேன். பின்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து என்னுடைய நகைகளை இடைகால பொறுப்பில் பெற்று கொண்டேன். பின்பு நீதிமன்றத்தில் என்னால் ஆஜர் செய்யப்பட்ட 3 பவுன் எடையுள்ள வளையல்கள் 2 சா.பொ.1. சுமார் 1 பவுன் மதிப்புள்ள பிரேலெட் 1, சா.பொ.2. சுமார் 3 பவுன் மதிப்புள்ள பதக்கசெயின் 1 சா.பொ.3. சுமார் 1 பவுன் மதிப்புள்ள மோதிரம் 1 சா.பொ.4. சுமார் 1/2 பவுன் எடையுள்ள தோடுகள் 3 சா.பொ. 5. பணம் ரூ.15,000/- சா.பொ.6. போலீசார் என்னை விசாாித்தார்கள்.

எதிாி தரப்பில் குறுக்கு விசாரணை.

தற்போது நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன் என்றால் சாிதான். என் கணவருக்கு மயக்க மருந்து கொடுத்த விஷயத்தை நான் தற்போது தான் முதன் முதலில் சொல்லியுள்ளேன் என்றால் சாியல்ல. நான் அப்போதே சொல்லிவிட்டேன். நான் எனக்கு ஊசி போட்டு விட்டார் என்ற விவரத்தையும் தற்போது தான் முதன் முதலாக சொல்லுகிறேன் என்றால் சாியல்ல. நான் அப்போதே சொன்னேன். ஆனால் அவர்கள் மாற்றி எழுதி கொண்டார்கள். எனக்கு எதிாியை எனது மருமகள் மூலமாக தான் பழக்கம் என்றால் இல்லை. எதிாி நான் வயதானவர்களுக்கு ஊசி போடுவேன் என்று என்னிடம் அறிமுகமானார். எதிாி எனக்கு எனது மருமகள் மூலமாக தான் பழக்கம் என்றாலும், நான் தற்போது அதனை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. என் வீட்டு பக்கத்தில் யார் யார் வீடு இருக்கிறது என்றால் பக்கத்தில் யார் வீடும் இல்லை. தூரமாக தான் இருக்கிறது. 1 பரலாங்கு தூரத்தில் கணேசன் வீடும், சுந்தரம் வீடு 1 அணப்பு தூரம் இருக்கிறது. மணி வீடு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றால் சுமார் 200 அல்லது 300 அடி தூரத்தில் இருக்கிறது. மயக்கம் வந்த போது வீட்டில் யாரும் இல்லையா என்றால் ஆமாம். ஆனால் நான் மயக்கம் தெளிந்து மணியை கூட்டி கொண்டு தான் காவல்

நிலையம் சென்றேன். மணியை அழைத்து வர எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 1 மணி நேரம் ஆகியிருக்கும். 1 மணி நேரம் கழித்து நானும், மணியும் வந்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் ஆமாம். நான் கைரேகை வைத்த காகிதத்தில் என்ன எழுதியிருந்தது என்று தொியாது என்றால் சாியல்ல. நகை திருடு போனதையும், ஊசி போட்டதையும் எழுதியிருந்தது. போலீசார் என்னிடம் மறுநாளே நகையை கொடுத்து விட்டார்களா என்றால் ஜர்ஜ் அம்மா நகையை கேட்கும் போது கொடுக்கவேண்டும் என்று சொல்லி கொடுத்தார்கள். என் வீட்டில் எத்தனை அறைகள் இருக்கிறது என்றால் ஒரு சமையறையும், ஒரு உறாலும் இருக்கிறது. அதற்கு முன்பாக ஓடு போட்டு உட்கார்வதற்கு ஒரு டாப் இறக்கி இருக்கிறோம். பீரோவை எப்போதும் பூட்டி தான் வைத்திருப்போமா என்றால் ஆமாம். ஆனால் சம்பவத்தன்று திறந்து வைத்து விட்டேன். எதிாி அரசு மருத்துவமனையில் இரத்த பாிசோதனை செய்யும் பணியில் இருக்கிறார் என்றாலும், எனது மருமகளும், எதிாியும் இரத்த பாிசோதனை கூடம் அமைக்கும் முடிவில் இருந்து அது பிரச்சினை ஆகி போனதால் அதற்காக எதிாியை பழிவாங்க வேண்டி எதிாியின் மீது எனது மருமகள் சொல்லி பொய் புகார் கொடுத்து அதை அனுசாித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் சொல்வது போல் சம்பவமே நடக்கவில்லை எஎன்றாலும், நடக்காத சம்பவத்திற்கு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஒம்/-திருமதி.T.மாலதி<br>
குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>
ஓமலூர் .